டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.10.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 25 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 090 | Madurai | Online Edition

# தேசிய தென்னை விருதுகள் 2026

# விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

புது தில்லி, அக்.5

இந்தியாவில் 2026 நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள 62-வது சர்வதேச தென்னை மாநாட்டின்போது வழங்கப்பட உள்ள தேசிய தென்னை விருதுகள் 2026-க்கான விண்ணப் பங்களை தென்னை வளர்ச்சி வாரியம் வரவேற்கின்றது.

தென்னை விவசாயத் துறையில் சிறப்பான பங்களிப்புகளை வழங்கியவர்களை அங்கீகரிக்கும் வகையில், பின்வரும் மூன்று பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன:

1. சிறந்த தேசிய தென்னை விவசாயி

2. சிறந்த தென்னை விஞ்ஞானி / ஆராய்ச்சியாளர்

3. சிறந்த தென்னை தொழில்முனைவோர்

நிர்ணயிக்கப்பட்ட தகுதி, நிபந்தனைகளின்படி, தேவையான சான்றுகளுடன் தகுதியுடைய விவசாயிகள், விஞ்ஞானிகள்/ ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் தங்களுக் குரிய பிரிவுகளில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஆன் லைன் இணையவழி மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.



விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 15.10.2026 ஆகும். விரிவான வழிகாட்டுதல்கள், தகுதி, நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் தென்னை வளர்ச்சி வாரியத்தின் இணையதளத்தில் கிடைக்கின்றன.

https://coconutboard.gov.in/docs/news/award26/award26.htm

இந்த விருதுகள், தென்னை சாகுபடி, ஆராய்ச்சி, புதுமை, மதிப்புக் கூட்டல், பதப்படுத்தல் மற்றும் தொழில்முனைவு ஆகிய துறைகளில் சிறப்பான பங்களிப்புகளை வழங்கியவர்களை அங்கீகரித்து ஊக்குவிப்பதற்கும், தென்னைத்துறையில் முன் உதாரணமான சாதனைகளை பாராட்டுவதற்கும் வழங்கப்படுகின்றன.

எனவே, தகுதியுள்ள விவசாயிகள், விஞ்ஞானிகள்/ஆராய்ச்சி-யாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி 15.10.2026க்கு முன் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# அக்ரி ஸ்டார்ட் அப் 3.0

திண்டுக்கல், அக்.5

திண்டுக்கல் GTN கலைக் கல்லூரியில் அக்ரி ஸ்டார்ட் அப் ஈ ஷா யோக மையம் சார்பாக 4.10.2026 அன்று நடைபெற்றது.




விழாவில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழக செயல் வேந்தர் தலைமையுரை ஆற்றினார்.

விழாவில் பல்கலைக்கழக வணிக இயக்குனர் சோம சுந்தரம், அக்ரி ஸ்டார்ட் அப்பில் வெற்றி பெற்றவர்களான சிந்துஜா, அஜய் ராஜா, விவேக், தீபா ஆகியோருடன் கலந்துரையால் நடைபெற்றது. FSSAI பற்றிய புரிதல் தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதிலிருந்து 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தளிர் கீரைகள் வளர்ப்பு மற்றும் ஆரோக்கிய பயன்கள் பற்றிய பயிற்சி

மதுரை, அக்.5

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வரும் அக்டோபர் 8 ஆம் தேதி அன்று தளிர் கீரைகள் (Microgreens) வளர்ப்பு மற்றும் அதன் ஆரோக்கிய பயன்கள் பற்றிய ஒரு நாள் கட்டண பயிற்சி நடக்க உள்ளது.

பயிற்சியில் தளிர்கீரைகள் வளர்க்கும் தொழில்நுட்பங்கள், விதைகளை நேர்த்தி செய்யும் முறைகள், தளிர்கீரைகளை பாதுகாப்பாக பேக்கிங் செய்யும் முறைகள், மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய தொழில்நுட்ப உரைகள் வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியின் பயிற்சி கட்டணம் ரூபாய் 590 ஆகும். மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் பங்கு பெற விருப்பமுள்ளவர்கள் தோட்டக்கலை இணை பேராசிரியர் முனைவர் அருள் அரசு, அலைபேசி எண் : 93449 36897 அல்லது முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை. அலைபேசி எண் : 99652 88760 தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# நவீன வேளாண்மையில் மொட்டு காளான் வளர்ப்பு

**மொட்டுக்காளான் வளர்ப்பு**

மொட்டுக் காளான் வளர்ப்பிற்கு எரு மட்கு (Compost) வளர்புலமாக பயன்படுத்தப்படுகிறது. நெல் வைக்கோல் (அ) கோதுமை வைக்கோலோடு சில அங்கக மற்றும் அனங்ககப் பொருட்கள் கலந்து, அதனைத் திருப்பிவிட்டு, நன்கு மட்கியபின் அதை காளான் வளர்ப்பிற்குப் பயன்படுத்த வேண்டும்.

மொட்டுக்காளான் மட்கு தயாரித்தலில் இரண்டு முறைகள் உள்ளன. சிறிய பண்ணைகளில் நீண்ட கால முறையில் மட்கு தயாரிக்கும் முறையைப் பின்பற்றி வருகின்றனர். ஆனால் நவீனமாக்கப்பட்ட பெரிய பண்ணைகள் குறுகிய கால முறையில் மட்கு தயாரிப்பதைப் பின்பற்றி வருகின்றன. மட்கு தயாரிப்பிற்கு நெல் வைக்கோல் அல்லது கோதுமை வைக்கோல் மிகச் சிறந்த வளர்புலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மட்க வைத்தல்**

வெளிதள நிலையில் வைக்கோலுடன் அங்ககப் பொருட்கள் கலந்து களத்தில் 2.2 மீ அகலம் மற்றும் 2 மீ உயரத்திற்குப் பரப்பி மற்றும் 35 மீ நீளத்திற்கு பரப்பி அதனை தண்ணீர் ஊற்றி நனைக்க வேண்டும். இது முதல்நிலை நனைத்தல் எனப்படும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து மீண்டும் குவியலைக் கலைத்துக் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

குவியலிலிருந்து வழிந்தோடும் நீரை சிமெண்ட் களத்தின் ஓரங்களில் குழிகள் அமைத்து சேகரிக்க வேண்டும். பின்னர் அந்நீரை மீண்டும் வைக்கோல் குவியலின் மேல் ஊற்றி சத்துப் பொருள் வீணாகாதவாறு செய்ய வேண்டும்.

பின்னர் வைக்கோலுடன் தேவையான இராசயன உரத்தைக் கலந்து ஒவ்வொரு முறை அதனைத் திருப்பும்போதும் அதன் ஈரப்பதம் 70 முதல் 72 சதவீதம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதனை 1.5 மீ அகலம் 1.5 மீ உயரம் உள்ள டிரபிசியக் குவியலாக அமைத்து நொதித்தலுக்கு உட்படுத்த வேண்டும். அடுத்ததாக 4, 7, 9, 11, 12வது நாளில் குவியலைக்

கலைத்து காற்றோட்டம் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு மட்க வைப்பதன் மூலம் வைக்கோலானது மென்மையானதாக மாறி விடுகிறது. ஒவ்வொரு முறை திருப்பும்போதும் குவியலின் அகலமானது குறைந்து கொண்டே வருகிறது. ஒன்பதாம் நாள் திருப்பும்போது தேவையான அளவு ஜிப்சம் இட்டுக் கலக்க வேண்டும். இதனால் குவியலின் மையத்தில் வெப்பம் 70 முதல் 75° செல்சியஸ் உள்ளது.

காற்றோட்டமுள்ள நிலையில் நுண்ணுயிர்களானது கார்போ ஹைட்ரேட் மற்றும் புரதம் ஆகியவற்றை கார்பன்-டை-ஆக்ஸைடு, தண்ணீர் மற்றும் அம்மோனியா வாகவும், நைட்ரஜன் நிறைந்த லிக்னைன் கூட்டுப்பொருளாக மாற்றுகிறது. இந்த முதல் நிலை அல்லது வெளித்தள நிலையின் முடிவில் அம்மோனியாவின் அளவு 0.4-0.5 சதமாக இருக்க வேண்டும்.

## இரண்டாம் நிலை அல்லது உள்தள முறை

இதன் முக்கிய நோக்கம் நோய்க் கிருமிகளையும் மற்றும் தீமை விளைவிக்கும் பூச்சிகளையும் அம்மோனியம் ஆகியவற்றையும் நுண்ணுயிரிகள் மூலம் நீக்கலாம். வெளித்தள நிலையில் 13-15 நாட்களும், உள்தள நிலையில் மட்கு தயாரிக்க 3-5 நாட்களும் தேவைப்படும். தரமாகத் தயாரிக்கப்பட்ட மட்கானது கரும்பழுப்பு நிறத்தில் இனிய மணத்துடனும், அம்மோனியா நெடி இல்லாமலும் இருக்க வேண்டும். இதன் ஈரப்பதம் 65 முதல் 70 சதம் இருக்க வேண்டும். மட்கினை எடுத்துப் பிழிந்தால் தண்ணீர் சொட்டக் கூடாது. மொட்டுக்காளான் வளர்ப்பிற்கு மரப்பெட்டிகளையோ அல்லது பாலீத்தீன் பைகளையோ உபயோகிக்கலாம். நவீனமாக்கப்பட்ட பண்ணைகளில் பாலித்தீன் பைகள் பயன்படுத்தப்படுகின்றன. தயாரான மட்கோடு ஒரு டன் மட்கிற்கு 10-12 கிலோ என்ற அளவில் காளான் விதைகளை நன்கு கலக்க வேண்டும். பின் அக்கலவையை (விதை கலந்த மட்கினை) 10 கிலோ என்ற விதத்தில் பாலித்தீன் பைகளில் அடைத்து வளர்ப்பு அறையில் வைத்துப் பராமரிக்க வேண்டும்.

காளான் பையின் மேல் 2 சத பார்மலின் கரைசலில் நனைத்தெடுத்த செய்தித்தாள்களைப் போட்டு, படுக்கை உலர்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காளான் பூசணம் பரவும் இப்பருவத்தில் அறையின் வெப்ப நிலையானது 23 முதல் 25° செல்சியஸ் ஆகவும் ஈரப்பதம் 90 முதல் 93% இருக்க வேண்டும்

தகவல் : *T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*

# மதிப்பு கூட்டுதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



விழுப்புரம், அக்.5

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்டம் சார்பில் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இதில் மதிப்பு கூட்டுதல் மற்றும் இரண்டாம் நிலை வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு துணை வேளாண்மை அலுவலர் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். இயற்கை விவசாயி சேதுராமன், வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெறும் வழிமுறைகள், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கினார்.

மேலும், இயற்கை வேளாண்மை மற்றும் மதிப்பு கூட்டுதல் தொடர்பான தனது அனுபவங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவசண்முகம், மதிப்பு கூட்டுதல் மற்றும் இரண்டாம் நிலை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

உதவி வேளாண்மை அலுவலர் ஆனந்தி, வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், இடுபொருட்களின் இருப்பு குறித்து எடுத்துரைத்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் சுதாகர் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் வீராசாமி மற்றும் சிட்டிபாபு செய்திருந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கம்பம் வட்டாரத்தில் வறட்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது




தேனி, அக்.5

தேனி மாவட்டம், கம்பம் வட்டாரம், புதுப்பட்டி கிராமத்தில் கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, கலசலிங்கம் பல்கலைக் கழகம், கிருஷ்ணன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் மாணவர்கள் சார்பில், வறட்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், உள்ளூர் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களிடையே நீர் சேமிப்பு, திறமையான நீர் பயன்பாடு, வறட்சியை எதிர்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வறட்சியைத் தாங்கும் நிலையான வேளாண் முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

இந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு துளி நீரும் பொன்னானது சேமிப்போம்! காப்போம்! என்ற கருத்தை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விவசாய உற்பத்தி மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் முக்கிய காரணிகளில் வறட்சியும் ஒன்றாகும் என்பதை மாணவர்கள் எடுத்துரைத்தனர். கிடைக்கக்கூடிய நீர் வளங்களை முறையாகத் திட்டமிட்டு, திறமையாகப் பயன்படுத்துவதன் மூலம் வறட்சியின் தாக்கத்தைக் குறைத்து பயிர் உற்பத்தியைப் பாதுகாக்க முடியும் என்று விளக்கப்பட்டது.

விழிப்புணர்வு நிகழ்ச்சியில், மழைநீர் சேகரிப்பு, பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் திறன்மிக்க நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்துதல் போன்ற பல்வேறு வறட்சி மேலாண்மை முறைகள் விளக்கப்படங்களின் மூலம் எடுத்துரைக்கப்பட்டன. நீர் வீணாவதைத் தடுத்து, பயிர்களின் வேர் பகுதிக்கு நேரடியாக நீரை வழங்குவதற்கு நுண்ணீர்ப்

பாசன முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மேலும், மண் மூடாக்கு (Mulching) முறையின் முக்கியத் துவமும் விளக்கப்பட்டது. வைக்கோல், பயிர் கழிவுகள் போன்ற இயற்கைப் பொருட்களை மண்ணின் மேற்பரப்பில் பரப்புவதன் மூலம் மண்ணில் உள்ள ஈரப்பதத்தைப் பாதுகாக்கவும், நீர் ஆவியாதலைக் குறைக்கவும், களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் முடியும் என்று மாணவர்கள் விளக்கினர்.

குறைந்த நீர் கிடைக்கும் சூழ்நிலையிலும் சிறப்பாக வளரக்கூடிய வறட்சியைத் தாங்கும் மற்றும் குறுகிய காலப் பயிர் ரகங்களைத் தேர்வு செய்வதன் முக்கியத்துவமும் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இத்தகைய பயிர் ரகங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் வறட்சி காலங்களில் பயிர் இழப்பைக் குறைத்து, விவசாய உற்பத்தியை ஓரளவு பாதுகாக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், தொழு உரம், கம்போஸ்ட் மற்றும் பசுந்தாள் உரம் போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத் துவமும் எடுத்துரைக்கப்பட்டது. இவ்வகை கரிம உரங்கள் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதுடன், மண்ணின் நீர்ப் பிடிப்புத் திறனை அதிகரித்து, நீண்ட காலத்திற்கு மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாக்க உதவும் என்று விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் சரியான பயிர் திட்டமிடல் மற்றும் சரியான நேரத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்வது குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. கிடைக்கக் கூடிய நீரின் அளவு மற்றும் மழைப்பொழிவு நிலைமைக்கு ஏற்ப பொருத்தமான பயிர்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மேலும், வேளாண் காடு வளர்ப்பு (Agroforestry) மற்றும் மரக்கன்றுகள் நடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது. மரங்கள் மண்ணைப் பாதுகாப்பதுடன், மண் அரிப்பைக் குறைத்து, நீண்டகால சுற்றுச்சூழல் நிலைத் தன்மைக்கு உதவுகின்றன என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

மேலும், ஒருங்கிணைந்த பண்ணைய முறையின் முக்கியத் துவமும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் பிற பண்ணைத்

தொழில்களை இணைத்து மேற்கொள்வதன் மூலம் கிடைக்கக் கூடிய வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதுடன், வறட்சி மற்றும் பயிர் இழப்பால் ஏற்படும் பொருளாதார அபாயங் களையும் குறைக்க முடியும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளின் வறட்சி மேலாண்மைக்கு வானிலை அடிப்படையிலான வேளாண் ஆலோசனைகள் மற்றும் அரசின் உதவித் திட்டங்களைப் பயன்படுத்துவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. விவசாயிகள் வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் வேளாண் ஆலோசனைகளைத் தொடர்ந்து அறிந்து கொண்டு, விதைப்பு, நீர்ப்பாசனம் மற்றும் பிற வேளாண் பணிகளை சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

நிகழ்ச்சியின் போது மாணவர்கள் விவசாயிகளுடன் கலந் துரையாடி, நீர் சேமிப்பு மற்றும் வறட்சி முன்னெச்சரிக்கைக்காக பண்ணை அளவில் செயல்படுத்தக்கூடிய நடைமுறை முறை களை விளக்கினர். தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறை களுக்காக நீர் வளங்களைப் பாதுகாப்பதில் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களின் கூட்டுப் பொறுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சி – நீரைச் சேமிப்போம், வேளாண்மையைப் பாதுகாப்போம், எதிர்காலத்தைப் பாதுகாப்போம் என்ற முக்கிய மான செய்தியுடன் நிறைவடைந்தது. RAWE திட்டத்தின் ஒரு முக்கிய செயல்பாடாக நடைபெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாணவர்கள் விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, அவர்களின் நடைமுறை வேளாண் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும், அதே நேரத்தில் வறட்சி மேலாண்மை மற்றும் நிலையான வேளாண்மை குறித்த பயனுள்ள தகவல்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கவும் உதவியது.

புதுப்பட்டி கிராமம் மற்றும் கம்பம் வட்டார விவசாயிகளிடையே நிலையான வேளாண்மை, திறமையான நீர் மேலாண்மை மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட வேளாண் முறைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தின் RAWE மாணவர்களான லோகேஸ்வரன், முகமது ஷிபன், சந்தோஷ்குமார், செல்வகுமார் மற்றும் எழிலரசன் ஆகியோரால் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.


ஜெயின்
நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# தேனீக் கூட்டங்களைப் பெருக்குவது எப்படி?

பழத்தோட்டங்கள், தென்னந்தோப்புகளில், மகரந்த சேர்க்கையை அதிகரிக்க தேனீக்கள் தேவைப்படுகிறது. அவற்றை எவ்வாறு தோட்டங்களில் குடியேறச் செய்வது என்பதில், எளிய சுடுமண் பானை தொழில்நுட்பம் பயனுள்ள தாக தெரிகிறது. அவற்றை பற்றி விரிவாக பார்ப்போம்.



## பானையில் தேனீக்களை பெருக்குதல் எப்படி?

பல்வேறு தேனீ இனங்களில், இந்திய தேனீ (ஏபிஸ் இண்டிகா) முக்கிய உள் நாட்டு மகரந்த சேர்க்கையாளராக, விளங்குகிறது. தேனீக்களை இயற்கையாக கூடு அமைக்கும் பொந்துகளை ஒத்திருக்கும் களி மண் பானைகளை மரங்களில் கட்டி தொங்க விடவேண்டும்.

## பானையின் சைஸ் எவ்வளவு?

பானையின் வாய்ப்பகுதி 10 செ.மீ விட்டம், வயிற்று பகுதி விட்டம் 45 செ.மீ, ஆழம் 40 செ.மீ இருக்க வேண்டும். பானையின் உள்ளே உருகிய தேன் மெழுகுப் பூஞ்சானது, தேன் தேடும் தேனீக்களை (HONEY BEES) ஈர்த்து, அந்த இடத்தை கூடு அமைக்கும் இடமாக ஆய்வு செய்ய அவற்றை தூண்டுகிறது. பானை வைக்கப்படும் இடத்தைப் பொருத்தே தேனீக்கள் கூடு (HIVE) அமைப்பது சாத்தியமாகும்.

**எந்த இடத்தில் (தோப்புகளில்) வைப்பது?**

அடர்த்தியான மரக்கிளைகளுக்குள், குறிப்பாக மா மரங்களின் அடர்ந்த இலைகளுக்கிடையில், மெழுகு பூசப்பட்ட பானைகளை பாதுகாப்பான முறையில் தலைகீழாக கட்டித் தொங்க விட வேண்டும்.

**தேனீக்கள் கூட்டம் எப்படி வரும்?**

பானைகள் கட்டிய சில நாட்களிலேயே, தேனீக்கள் அவற்றை ஆய்வு செய்யத் தொடங்கி, மூன்று வாரங்களில் காட்டுத் தேனீக்கள் பானைக்குள், குடியேறுகின்றன. ஒரு முறை கூட்டம் நிலைப்பெற்றவுடன் தேனீக்கள் விரைவாக தேனடைகளை அமைத்து, புழுக்களை வளர்த்து மகரந்த தூள்கள் தேனை சேகரிக்க தொடங்குகின்றன. பானைகள் வெப்ப மாற்றங்களிலிருந்து பாதுகாப்பு அளித்து தேனீக் கூட்ட வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையை வழங்குகின்றன.

**எந்த எந்த மரங்களுக்கு இந்த பானை முறை ஏற்றதாக உள்ளது?**

மா மரம், கொய்யா, மாதுளை, சப்போட்டா, தென்னை போன்ற மர வகை தாவரங்களில் மகரந்த சேர்க்கைக்கு தேனீக்கள் உதவுகின்றன. இதன் மூலமாக அதிக மகசூல், தரமான விளைச்சல் கிடைப்பதால் கூடுதலான வருமானத்தை உறுதி செய்கிறது.

இந்த முறைக்கு மிகக் குறைந்த முதலீடு மட்டுமே தேவைப் படுவதால், விவசாயிகள், தோட்டக்கலை ஆர்வலர்கள், கல்வி நிறுவனங்கள் இந்த முறையை பின்பற்றலாம்.

வேளாண் துறையைத் தாண்டி சுற்றுச்சூழல் நிலைத் தன்மைக்கும் இந்திய தேனீக்கள் பங்களிப்பை வழங்குகின்றன என்பதில் மாற்று கருத்து இல்லை.

என்ன பழைய பானை தேடிபிடித்து மரத்தில் கட்டி தொங்க விட தயாரா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வாசுதேவநல்லூரில் நுண்ணிலைக் கீரைகள் உற்பத்தி குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி

தென்காசி, அக்.5

ஊரக தோட்டக்கலைப் பணியனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பள்ளி (KSAH) மாணவர்கள், தென்காசி மாவட்டம், வாசுதேவ நல்லூரில் உள்ள உள்ளூர் சமூக மக்களுக்காக நுண்ணிலைக் கீரைகள் (Micro-greens) உற்பத்தி குறித்த செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.




இந்நிகழ்ச்சி M.அபர்ண உன்னிதன், ககனி ரசக்ணா, கார்த்திகா ஸ்ரீ M. மற்றும் G.அனிதா ஆகிய மாணவர் களால் ஏற்பாடு செய்யப்பட்டது. நுண்ணிலைக் கீரைகளின் சாகுபடி முறைகள் மற்றும் அவற்றின் ஊட்டச்சத்து நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். செயல்விளக்கத்தின் போது, நுண்ணிலைக் கீரைகள் பற்றிய அறிமுகம், ஊட்டச்சத்து நிறைந்த செயல்பாட்டு உணவாக அவற்றின் முக்கியத்துவம், குடும்ப ஊட்டச்சத்து மற்றும் வருமானம் ஈட்டுவதற்கான அவற்றின் வாய்ப்புகள் குறித்து பங்கேற்பாளர்களுக்கு விளக்கப்பட்டது.

மாணவர்கள் நுண்ணிலைக் கீரைகள் உற்பத்தியில் மேற்கொள்ளப்படும் விதைத் தேர்வு, வளர்ப்புத் தட்டுகளைத் தயாரித்தல், விதைப்பு முறைகள், நீர்ப்பாசனம், பராமரிப்பு மற்றும் அறுவடை முறைகள் ஆகியவற்றை படிப்படியாக செயல்விளக்கத்தின் மூலம் எடுத்துரைத்தனர்.

மேலும், குறுகிய காலத்தில் அறுவடைக்கு வரும் தன்மை, குறைந்த முதலீட்டுத் தேவை மற்றும் வீடுகள், மாடித் தோட்டங்கள், சமையலறைத் தோட்டங்கள் போன்ற குறைந்த இடங்களிலும் நுண்ணிலைக் கீரைகளை எளிதாகச் சாகுபடி செய்ய முடியும் என்பதையும் பங்கேற்பாளர்களுக்கு விளக்கினர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-6400119610 IS 9537 CML-6400121694

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெற்பயிரில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வு (Agro-Ecosystem Analysis – AESA in Paddy)

நெல் தமிழ்நாட்டின் முக்கிய உணவுப் பயிர்களில் ஒன்றாகும். நெற்பயிரில், ஏதேனும் சத்துக்குறைபாடோ, பூச்சிகள் அல்லது நோய்கள் தென்பட்டவுடன், உடனடியாக, வேதியியல் உரங் களையோ, பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது பல நேரங்களில் தேவையற்ற செலவையும், இயற்கை எதிரிகளின் அழிவையும் ஏற்படுத்தக்கூடும்.

இதற்கு மாற்றாக, வயலில் நிலவும் உண்மையான சூழலை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் பயிர் மேலாண்மை முடிவுகளை எடுக்கும் முறையே வேளாண் சூழலியல் பகுப்பாய்வு (Agro-Ecosystem Analysis – AESA) ஆகும். வேளாண் சூழலியல் பகுப்பாய்வு முறையில் பயிரின் வளர்ச்சி, பூச்சிகள், இயற்கை எதிரிகள், நோய்கள், களைகள், மண் மற்றும் நீரின் நிலை, வானிலை போன்ற அனைத்து காரணி களும் ஒருங்கிணைந்து ஆய்வு செய்யப்படுகின்றன. இதன் மூலம் தேவையான நேரத்தில் சரியான பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

### வேளாண் சூழலியல் பகுப்பாய்வு (AESA) என்றால் என்ன?

ஒரு நெல் வயலை தனித்தனியான பிரச்சினைகளின் தொகுப் பாகப் பார்க்காமல், பயிர் பூச்சி இயற்கை எதிரி மண் நீர் வானிலை ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய உயிர்ச் சூழல் அமைப்பாகக் கருதி ஆய்வு செய்வதே வேளாண் சூழலியல் பகுப்பாய்வு AESA ஆகும்.

இதன் முக்கிய நோக்கம், வயலில் பூச்சி இருக்கிறதா? என்பதை மட்டும் கண்டறிவது அல்ல. மாறாக, பூச்சியின் எண்ணிக்கை எவ்வளவு?, அதை கட்டுப்படுத்த இயற்கை எதிரிகள் போதுமான அளவில் உள்ளனவா?, பயிரின் ஆரோக்கியம் எப்படி உள்ளது?, உடனடியாக மேலாண்மை நடவடிக்கை தேவையா? போன்ற கேள்விகளுக்கு வயல் கண்காணிப்பின் மூலம் பதில் பெறுவதாகும்.

### வேளாண் சூழலியல் பகுப்பாய்வின் முக்கிய கூறுகள்

வேளாண் சூழலியல் பகுப்பாய்வு மேற்கொள்ளும் போது பின் வரும் அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும் :

1. பயிரின் வளர்ச்சி மற்றும் ஆரோக்கிய நிலை
2. பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் சேதத்தின்அளவு
3. இயற்கை எதிரிகளின் எண்ணிக்கை
4. நோய் தாக்குதல் மற்றும் அதன் தீவிரம்
5. களைகளின் வகை மற்றும் அடர்த்தி
6. மண்ணின் ஈரப்பதம் மற்றும் நீர் நிலை
7. அன்றைய மற்றும் முந்தைய வானிலை நிலவரம்
8. விவசாயியின் முந்தைய வயல் அனுபவம்

### நெல் வயலில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வு மேற் கொள்வது எப்படி?

வாரத்திற்கு ஒரு முறை குறிப்பிட்ட நாளில் வயலை முழுமையாகக் கண்காணிப்பது சிறந்தது. வரப்போரத்திலிருந்து மட்டும் வயலைப் பார்ப்பதைத் தவிர்த்து, வயலின் உட்பகுதிக்குச் சென்று பல இடங்களில் மாதிரிப் பகுதிகளைத் தேர்வு செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பறக்கும் பூச்சிகள், செடிகளில் காணப்படும் பூச்சிகள், முட்டைக் குவியல்கள், நோய் அறிகுறிகள், சேதமடைந்த தண்டுகள் மற்றும் இலைகள் ஆகிய வற்றைக் கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் சிலந்திகள், பொறி வண்டுகள், தட்டான்கள் மற்றும் ஒட்டுண்ணிகள் போன்ற நன்மை செய்யும் உயிரினங்களையும் பதிவு செய்ய வேண்டும். மண்ணின் நிலை வெள்ளமாக உள்ளதா, ஈரமாக உள்ளதா அல்லது வறண்டுள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

### நெற்பயிரின் ஆரோக்கியத்தை மதிப்பிடுதல்

வேளாண் சூழலியல் பகுப்பாய்வில், பயிரின் ஆரோக்கியமே முதன்மையானது. நெற்பயிரில் பின்வரும் அம்சங்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் :

- செடியின் உயரம் மற்றும் வளர்ச்சி
- தூர்களின் எண்ணிக்கை
- இலைகளின் நிறம் மற்றும் ஆரோக்கியம்

– வேர் வளர்ச்சி

– கதிர்களின் எண்ணிக்கை மற்றும் வளர்ச்சி

– சத்துகுறைபாட்டு அறிகுறிகள்

– பூச்சி மற்றும் நோய் சேதத்தின் அளவு

ஆரோக்கியமான பயிர், சில அளவிலான பூச்சிச் சேதத்தைத் தாங்கி மீண்டும் வளரக்கூடிய திறன் கொண்டது. எனவே, ஒரு சில பூச்சிகள் தென்பட்டவுடன் மருந்து தெளிப்பதைத் தவிர்த்து, பயிரின் உண்மையான சேத நிலையை மதிப்பிடுவது அவசியம்.

நெற் பயிரில் தண்டுத்துளைப்பான், இலைச் சுருட்டுப்புழு, பழுப்புத் தத்துப்பூச்சி, பச்சைத் தத்துப்பூச்சி மற்றும் கதிர் நாவாய்ப் பூச்சி போன்ற பல்வேறு பூச்சிகள் தாக்கக்கூடும். அதே வயலில் சிலந்திகள், பொறி வண்டுகள், தட்டான்கள், தரை வண்டுகள் மற்றும் பல்வேறு ஒட்டுண்ணிகள் போன்ற இயற்கை எதிரிகளும் காணப்படுகின்றன.

உதாரணமாக, நெல்தண்டுத் துளைப்பான் தாக்குதலில் இளம் பயிரில் குருத்து காய்தல் மற்றும் கதிர் பருவத்தில் வெண்கதிர் போன்ற அறிகுறிகள் காணப்படலாம். இத்தகைய சேத அறிகுறிகளுடன் பூச்சி மற்றும் இயற்கை எதிரிகளின் எண்ணிக்கையையும் சேர்த்து மதிப்பிட வேண்டும்.

**வேளாண் சூழலியல் பகுப்பாய்வு வரைபடம் தயாரித்தல்**

வயல் கண்காணிப்புக்குப் பிறகு சேகரிக்கப்பட்ட தகவல்களை ஒரு பெரிய தாளில் வரைபடமாகப் பதிவு செய்யலாம்.

**தாளின் மையத்தில் :** நெற்பயிரின் தற்போதைய வளர்ச்சி நிலை

**ஒரு பக்கத்தில் :** தீமை செய்யும் பூச்சிகள் மற்றும் நோய்கள்

**மற்றொரு பக்கத்தில் :** இயற்கை எதிரிகள்

**கீழ் பகுதியில் :** மண் ஈரப்பதம், நீர் நிலை, களைகள் மற்றும் வானிலை

இதன் அடிப்படையில் விவசாயிகள் குழுவாகக் கலந்துரையாடி அடுத்த வாரத்திற்கான மேலாண்மை முடிவை எடுக்கலாம். வயல் கண்காணிப்பு, தகவல்களை வரைபடமாகப் பதிவு செய்தல், பகுப்பாய்வு மற்றும் முடிவெடுத்தல் ஆகியவை வேளாண் சூழலியல் பகுப்பாய்வு முறையின் முக்கிய பகுதிகளாகும்.

**வேளாண் சூழலியல் பகுப்பாய்வு அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள்**

வயல் ஆய்வின் முடிவில் பின்வரும் முடிவுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை எடுக்கப்படலாம் :

உடனடி நடவடிக்கை தேவையில்லை ; தொடர்ந்து கண் காணித்தல்

இயற்கை எதிரிகளை ப்பாதுகாத்தல்

நீர் அல்லது உர மேலாண்மையைச் சரி செய்தல்

களை மேலாண்மை மேற்கொள்ளுதல்

பாதிக்கப்பட்ட செடிகள் அல்லது பூச்சி முட்டைக் குவியல்களை அகற்றுதல்

உயிரியல் அல்லது தாவரச் சார்ந்த மேலாண்மை முறைகளைப் பயன்படுத்துதல்

பொருளாதார சேதநிலை அடிப்படையில் மட்டுமே தேவையான பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

**வேளாண் சூழலியல் பகுப்பாய்வு முறையின் நன்மைகள்**

வேளாண் சூழலியல் பகுப்பாய்வு முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் தேவையற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டைக் குறைக்கலாம். நன்மை செய்யும் இயற்கை எதிரிகளைப் பாதுகாக்கலாம். சாகுபடிச் செலவைக் குறைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தலாம். மேலும், விவசாயிகள் தங்களது வயலின் சூழலைத் தாங்களே ஆய்வு செய்து அறிவியல் அடிப்படையில் முடிவெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ள முடியும்.

**முடிவுரை**

பூச்சியைக் கண்டவுடன் மருந்து தெளிப்பது அல்ல; வயல் சூழலைப் புரிந்து கொண்டு முடிவெடுப்பதே சிறந்த பயிர்ப் பாதுகாப்பு. நெற்பயிரில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வை

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

வாரந்தோறும் மேற்கொள்வதன் மூலம் பயிரின் ஆரோக்கியம், பூச்சிகள், இயற்கை எதிரிகள் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை ஒருங்கிணைத்து மதிப்பிட முடியும்.

இதன் மூலம் தேவையற்ற ரசாயனப் பயன்பாட்டைக் குறைத்து, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நெல் சாகுபடியை ஊக்குவிக்க முடியும்.

தகவல் : ***முனைவர் சு.ம.சுரேஷ்குமார் (உழவியல் துறை), முனைவர் செ.சுதாஷா, (தாவர நோயியல் துறை), நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.***



# அயிகுடி கிராமத்தில் தென்னை மரத்திற்கு வேர் மூலம் ஊட்டச்சத்து அளிக்கும் செயல்விளக்கம்



தென்காசி, அக்.5

கலசலிங்கம் பல்கலைக்கழக இறுதியாண்டு பி.எஸ்சி. தோட்டக்கலை மாணவர்கள், ஊரக தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்டம் (RHWE) சார்பில் மாணவிகள் காவியா வெற்றிவேலன், ஹரிதா ஸ்ரீ, சோபிகா மற்றும் மேகனா ஆகியோர், பாடநெறி ஆசிரியர் முனைவர் சீ.விஜயகுமார் வழிகாட்டுதலிலும், பாடநெறி ஒருங்கிணைப்பாளர் ஏ.ஏஞ்சல், மேற்பார்வையிலும், உதவி தோட்டக்கலை இயக்குநர் சுபாஷினி, வழிகாட்டுதலின் கீழ், அயிகுடி கிராமத்தில் Rural Horticultural Work Experience (RHWE) திட்டத்தின் கீழ், தென்னை விவசாயி களுக்காக தென்னை மரத்திற்கு வேர் மூலம் ஊட்டச்சத்து அளிக்கும் (Coconut Root Feeding) செயல்விளக்கம் நடைபெற்றது.

இச்செயல்விளக்கத்தில் தென்னை மரத்திற்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வேர் மூலம் நேரடியாக வழங்கும் முறையின் முக்கியத்துவம், பயன்படுத்தும் முறை மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மரத்தின் தண்டி லிருந்து சுமார் 1 – 1.5 மீட்டர் தொலைவில் ஆரோக்கியமான வேர் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, வேர் நுனியை சாய்வாக வெட்டி, தேவையான ஊட்டச்சத்து கரைசலை பாலித்தீன் பையில் வைத்து வேர் நுனியை அதில் மூழ்கச் செய்யும் முறையும் செயல்விளக்கமாக செய்து காட்டப்பட்டது. வேர் மூலம் ஊட்டச் சத்து அளிப்பதால் ஊட்டச்சத்துக்கள் நேரடியாக தாவரத்திற்குச் சென்று விரைவாக பயன்படுத்தப்படுவதுடன், தென்னை மரத்தின் வளர்ச்சி மற்றும் காய்ப்பு திறனை மேம்படுத்த உதவும் என்பதை விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. இந்த செயல் விளக்கம் மூலம் விவசாயிகள் தென்னை மரத்தில் வேர் மூலம் ஊட்டச்சத்து வழங்கும் நடைமுறை தொழில்நுட்பத்தை நேரடியாக அறிந்து கொண்டனர்.

# கலப்பு பண்ணையம் – கவலையில்லா வருமானம்

ஆடு மாடு கோழி சேர்ந்திடுமே,
அள்ளி அள்ளி வருமானம் தந்திடுமே!
வான் மழை பொழிய மறந்தாலுமே,
வளர்த்திடும் கால்நடைகள் காலமெல்லாம் கைகொடுக்குமே!

நிலையான வருமானம் நீடித்திடுமே
நம் வாழ்வில் வளம் நிறைந்திடுமே!
திட்டமிட்டாலே கிடைக்கும் வருமானமே,
தித்திக்கும் இனிய வருமானமே!

இனங்கள் பல இணைந்திடுமே,
இனிமையுடன் என்றும் வாழ்ந்திடுமே!
நீர்நிலம் வளம் பெற்றிடுமே,
நம் உழைப்புக்கு பலன் கிடைத்திடுமே!

பால் தரும் வருமானம் ஒருபக்கம்,
இறைச்சி தரும் வருமானம் ஒருபக்கம்,
முட்டை தரும் வருமானம் ஒருபக்கம்,
மீன் தரும் வருமானம் ஒருபக்கம்



காய்கனி தரும் வருமானம் ஒருபக்கம்,
தானியம் தரும் வளமும் ஒருபக்கம்,
சத்தான உணவு பண்ணையிலே,
சந்தோஷம் பொங்கும் இல்லத்திலே!

கால்நடை கழிவுகள் உரமாகும்,
உரமான மண் வளமாகும்!
பண்ணைக் கழிவுகள் வீணாகாமல்,
புதிய வளமாக மாறிடுமே!

மாட்டுச் சாணம் எருவாகும்,
மண்ணின் வளம் பெருகிடுமே
வீணாகும் பொருளும் வளமாகி,
விவசாயியின் செலவை குறைத்திடுமே

குடும்பம் சேர்ந்து உழைத்திடுமே,
கூடுதல் வருமானம் பெருகிடுமே!
அனைத்தும் ஒன்றாய் இணைந்திடுமே!
இயற்கையோடு இணைந்து வாழ்ந்திடுமே.

நீர் சேமித்து பயிர் வளர்த்து,
நிலையான வளத்தைப் பெருக்கிடலாமே!
மண் வளத்தைப் பாதுகாத்து,
மறுமுறை விதைக்கும் நம்பிக்கை வளர்த்திடலாமே!

இளைஞர்களுக்கு சுயதொழில் வழிகாட்டுமே,
இல்லத்திற்கும் வளம் சேர்த்திடுமே!
கலப்பு பண்ணையம் வளர்ப்போமே,
கவலையில்லா வருமானம் பெறுவோமே!

உழைப்பை வளமாக்கி,
வாழ்வை வளமாக்குவோம்!

ஒருங்கிணைந்த பண்ணையம் ஓங்கட்டும் – விவசாயக் குடும்பங்கள் வாழ்வில் வளம் பெருகட்டும்!

தகவல் : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்.***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-6400119810
IS 9537 CML-6400121694

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**